# நிதித்துறை

## கோரிக்கை எண். 50

# ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021 - 2022


முனைவர் பழனிவேல் தியாக ராஜன்

நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2021

# கோரிக்கை எண்.50

# ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

## கொள்கை விளக்கக் குறிப்பு 2021-2022

ஆரம்ப காலக்கட்டத்தில், தமிழ்நாட்டில் குடிமைப் பணிகள் ஒழுங்குமுறைகள், 1889-ன் கீழ் மாநில அரசின் ஓய்வூதியதாரர்கள் நிர்வகிக்கப்பட்டனர். மெட்ராஸ் ஓய்வூதியச் சட்டத்தின் கீழ் (Madras Pension Code) ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. இச்சட்டத்திற்கு பதிலாக, 01-01-1979 அன்று முதல் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்,1978 நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 01-04-2003 க்கு முன்னர் பணியில் சேர்ந்த அனைத்து பணியாளர்களுக்கும் பொருந்தும். பழைய ஓய்வூதிய திட்டத்தின்கீழ் தற்போது 3,44,834 அரசு பணியாளர்கள் உள்ளனர். மேலும், கூடுதலாக 7,31,559 ஓய்வூதியதாரர்கள்

மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். மானியக் கோரிக்கை எண் 50–ன் கீழ், ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுகாலப் பயன்களுக்கான செலவினத்தை மேற்கொள்ளும் பொருட்டு **28,250.59** கோடி ரூபாய் பின்வரும் முக்கிய இனங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **விவரம்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | மாநில அரசு ஓய்வூதியதாரர்கள் | 4,03,590 |
| 2. | ஆசிரியர் ஓய்வூதியதாரர்கள் | 65,514 |
| 3. | மாநில அரசு குடும்ப ஓய்வூதியதாரர்கள் | 2,14,931 |
| 4. | ஆசிரியர் குடும்ப ஓய்வூதியதாரர்கள் | 26,598 |

| வ. எண். | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 5. | கருணைத்தொகை பெறும் ஓய்வூதியதாரர்கள் உட்பட ஏனைய ஓய்வூதியதாரர்கள் | 20,926 |
| | **மொத்தம்** | **7,31,559** |

01-04-2003 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியில் சேர்ந்துள்ள பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். தற்போது, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 5,88,166 பணியாளர்கள் உள்ளனர். மேலும் 01-04-2003-க்கு பிறகு பணியமர்த்தப்பட்ட 22,893 பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திலிருந்து வயது முதிர்வு மற்றும் பிற காரணங்களுக்காக திட்டத்தில் சேர்ந்த பலன்களைப் பெற்று வெளியேறி உள்ளனர்.

## பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

**2. முன்னுரை:-**

(i) ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி மாநில அரசானது 01-06-1988 முதல் ஒன்றிய அரசின் ஊதிய விகிதங்களை தனது பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்தியது. இதன் விளைவாக, ஓய்வுபெற்ற பணியாளர்களின் ஓய்வூதியமானது அப்பணியாளர்கள் வகிக்கும் பதவிக்கான திருத்தப்பட்ட ஊதிய விகிதத்தின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்டது. அதிகரித்து வரும் சம்பளம் மற்றும் ஓய்வூதிய செலவினங்களால் அரசின் நிதிச் சுமை ஏற்க இயலாத அளவிற்கு அதிகரித்து வருவதால், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நலத் திட்டங்களை நிறைவேற்ற, தேவையான நிதி ஆதாரங்களை மட்டுப்படுத்துகிறது

(ii) எனவே ஓய்வூதியத் திட்டத்தினை மறுசீரமைப்பதற்கான பரிந்துரைகளை அளிக்கும்

பொருட்டு கர்நாடக அரசின் ஓய்வுபெற்ற தலைமைச் செயலாளர் திரு.பி.கே.பட்டாச்சார்யா, அவர்களின் தலைமையில் மத்திய அரசு 26-06-2001 அன்று உயர்மட்ட வல்லுநர் குழுவினை அமைத்தது. இந்த உயர்மட்ட வல்லுநர் குழுவானது தனது பரிந்துரையில், பணியாளர்கள் மற்றும் மத்திய அரசிடமிருந்து சமமான பங்களிப்புடனும், பணியாளர்கள் வரையறுக்கப்பட்ட பயனுள்ள ஓய்வூதியம் பெறக்கூடிய வகையிலான புதிய திட்டத்தை பிப்ரவரி 2002-இல் பரிந்துரைத்தது. இந்திய அரசின் நோக்கமானது, புதியதாக அரசுப் பணியில் சேரும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பங்களிப்புடன் கூடிய ஒரு திட்டத்தை வடிவமைப்பதோடு, மாநில அரசு பணியாளர்கள், நடுத்தர வர்க்கத்தினை சார்ந்த சுயதொழில் புரிபவர்கள் மற்றும் அமைப்புசாராத் துறைகளில் குறைந்த வருமானம் உள்ளவர்கள் போன்ற பிற

குழுக்களுக்கு சேவை செய்யும் நோக்கத்தில் உட்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

(iii) ஓய்வூதிய சீர்திருத்தம் தொடர்பான மத்திய அரசின் முன்முயற்சியினைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் 2002–2003–ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தில் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

*"நாட்டின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழக அரசு தான் மிக அதிக அளவிலான ஓய்வூதிய செலவுப் பொறுப்புகளை ஏற்றுள்ளது. மொத்த வருவாயினச் செலவினங்களில் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் செலவினங்களில் இதுவும் ஒன்றாகும். 2001–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் தேதியிலிருந்து பணியில் நியமிக்கப்படும் அனைத்துப் பணியாளர்களும், மத்திய அரசினால் அமைக்கப்பட்டுவரும் பங்களிப்பு ஓய்வூதியத்*

*திட்டத்தைப் (Contributory Pension Scheme) போன்றதொரு புதிய திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவர் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது."*

(iv) வரவு–செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டதன் தொடர் நடவடிக்கையாக, 01–04–2003 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ மாநில அரசுப் பணியில் சேர்ந்துள்ள பணியாளர்களுக்கு அரசாணை (நிலை) எண்.259, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள். 06–08–2003–ன் வாயிலாக பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனடிப்படையில் 01–04–2003 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பணியமர்த்தப்பட்ட பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டனர். மேலும் அரசாணை எண்.304, நிதித்துறை, நாள்.27–05–2004–ன் வாயிலாக பங்களிப்பு

ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட பணியாளர்களுக்கு தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 பொருந்தாது என்று உரிய திருத்தங்கள் வெளியிடப்பட்டன.

**3. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கான வழிமுறைகள்**

(i) 01-04-2003 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியில் சேர்ந்துள்ள பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவ்வாறு 01-04-2003 அன்று அல்லது அதற்கு பின்னர் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளர்களிடமிருந்து பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பாக அடிப்படை ஊதியம், அகவிலை ஊதியம் மற்றும் அகவிலைப் படியில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், அரசு சமமான அளவு பங்குத் தொகையினை செலுத்துகிறது. அரசு தகவல் தொகுப்பு விவர

மையமானது பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கணக்குகளை பராமரித்து வருகின்றது.

(ii) இத்திட்டத்தின் கீழ், 30–06–2021 ஆம் நாள் நிலவரப்படி சுமார் 5,88,166 அரசு, அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்கள் கொண்டு வரப்பட்டு, பங்களிப்புத் தொகை மற்றும் வட்டி உட்பட மொத்தம் 46,052 கோடி ரூபாய் பொதுக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

**4. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சேர்ந்த தொகைக்கான வட்டி விகிதம்**

தற்போது, பொது வருங்கால வைப்பு நிதி கணக்குகளுக்கு பொருந்தும் காலாண்டுக்கான வட்டி விகிதத்திலேயே பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்த தொகைக்கான வட்டி அனுமதிக்கப்படுகிறது. பொது வருங்கால வைப்பு நிதிக்கு 01–04–2021 முதல் 30–06–2021 வரையுள்ள கால அளவிற்கு 7.1 சதவீதம் வட்டி

அனுமதிக்கப்படுகிறது. தேசிய ஓய்வூதியத் திட்டக் கட்டமைப்பில் பல்வேறு ஓய்வூதிய நிதி மேலாண்மை கணக்குகளின் கீழ் பெறப்படுகின்ற வருமானத்தை விட இந்த வட்டி விகிதம் குறைவாகவே உள்ளது.

## 5. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சேர்ந்த தொகையிலிருந்து செய்யப்பட்ட முதலீடுகள்

தற்போது, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சேர்ந்த சந்தா தொகையானது, ஆயுள் காப்பீட்டு நிறுவன ஓய்வூதிய நிதி (ரூ.28,725.32 கோடி) மற்றும் ஏல அடிப்படையிலான கருவூலப்பட்டி (ரூ.16,500 கோடி) ஆகியவற்றில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இம்முதலீடுகளிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையானது பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு அளிக்கப்படும் பொது வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி விகிதத்தை விட குறைவாக உள்ளது. இந்நிதியிழப்பானது இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத்

துறைத் தலைவரின் தணிக்கைத் தடையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு அரசுக்கு பெரும் நிதியிழப்பு ஏற்படுவதுடன் நிறுவன கட்டமைப்பின் கீழ் முதலீடு செய்யப்பட்டிருந்தால் பணியாளர்களுக்கு அதிக பயன்களை பெற இயலும்.

**6. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றவர்களுக்கு இதுவரை செய்யப்பட்ட தீர்வு**

01–04–2003–க்கு பிறகு பணியமர்த்தப்பட்டு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சேர்ந்த பணியாளர்கள் ஏற்கனவே ஓய்வுபெறத் தொடங்கிவிட்டனர், அத்தகைய ஓய்வூதியதாரர்களுக்கான வருடாந்திர திட்டம் ஏதும் இல்லாத நிலையில், அரசின் இடைக்கால நடவடிக்கையாக அவர்களின் கணக்கில் சேர்ந்த பணியாளர்களின் பங்களிப்பு, அரசின் பங்களிப்பு மற்றும் ஒட்டுமொத்த தொகைக்கான வட்டித் தொகையுடன் தீர்வாக வழங்கப்பட

வேண்டும் என்று அரசாணை (நிலை) எண்.59, நிதி (ஓ.கு.பி) துறை, நாள் 22-02-2016 வாயிலாக ஆணையிடப்பட்டுள்ளது. 31-07-2021 ஆம் நாள் நிலவரப்படி, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், பணி ஓய்வு பெற்றவர்கள், பணித்துறப்பு, இறந்த மற்றும் பணி நீக்கம் செய்யப்பட்ட 22,893 பணியாளர்களுக்கு இறுதி தீர்வு தொகையாக 1,240.28 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கும் குறைவான பணிக்காலம் முடித்தவர்களுக்கு இந்த முறை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகும், ஏனெனில் அவர்கள் கணக்கில் குறைந்தபட்ச ஒட்டுமொத்த தொகை மற்றும் குறைந்த வருடாந்திர தொகை மட்டுமே பெற வாய்ப்புள்ளது. எனினும் இந்த நிலை 10 ஆண்டுகளுக்கு மேல் பணிக்காலம் உள்ளவர்களுக்கு குறைந்த பலன் பெறும் நிலை என்பதால் ஏற்புடையதாக அமையாது. வருடாந்திர கொடுப்பனவுகளில் முதலீடுகள் குறித்த தெளிவு

இல்லாமல் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளதால், ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அதிக பாதுகாப்பற்ற நிலை உள்ளது. எனவே பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் சேர்ந்துள்ள பங்களிப்புத் தொகையினை கையாள்வதில் தெளிவான வழிமுறை உடனடியாக தேவைப்படுகிறது.

## 7. உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

அரசாணை (நிலை) எண். 260, நிதி (ஓகுபி)த் துறை, நாள் 15-10-2015-ன் வாயிலாக மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் உள்ளாட்சிகளில் பணிபுரியும் உள்ளாட்சிப் பணியாளர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கான மாநில ஒருங்கிணைப்பு அதிகாரியாக (State Nodal Officer) கருவூலக் கணக்குத்துறை ஆணையர் அவர்களை அரசு நியமித்துள்ளது. இதற்கான மென்பொருள் உருவாக்கப்பட்டு இது தொடர்பான புள்ளிவிவரங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## 8. தமிழ்நாட்டில் உள்ள அகில இந்தியப் பணி அலுவலர்களுக்கான தேசிய ஓய்வூதிய முறை

தேசிய ஓய்வூதிய முறை 01–01–2004 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியில் சேர்ந்த தமிழ்நாடு பணிநிலையில் உள்ள அகில இந்தியப்பணி அலுவலர்களுக்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய ஓய்வூதிய முறைக்கு தேசிய பத்திரங்கள் வைப்பு நிறுவனம் (National Securities Depository Limited) ஆவண வைப்பு நிறுவனமாக நியமனம் செய்யப்பட்டதுடன், ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையம் (PFRDA) அறக்கட்டளை வங்கியாகவும், ஓய்வூதிய நிதி மேலாளர் மற்றும் வருடாந்திர சேவை வழங்குவோராகவும் தமிழ்நாட்டைச் சார்ந்த அகில இந்தியப் பணி அலுவலர்களுக்கு நடைமுறைப்படுத்த தமிழக அரசினால் 28–06–2017 அன்று ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அகில இந்தியப்பணி அலுவலர்களுக்கான சந்தா மற்றும் அரசின்

பங்களிப்புத் தொகையாக 28.73 கோடி ரூபாய் தேசிய ஓய்வூதியத் திட்ட அறக்கட்டளைக்கு (National Pension Scheme Trust) 31-07-2021 வரையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**9. தேசிய ஓய்வூதிய முறையின் கட்டமைப்பு**

தேசிய ஓய்வூதியத்திட்டமானது தனது சந்தாதாரர்கள் ஓய்வூதியத்திற்காக சேமிக்க ஏதுவாக பின்வரும் முக்கிய அம்சங்களை வழங்குகிறது.

(i) தேசிய ஓய்வூதிய முறையானது 01-01-2004 முதல் புதிய ஓய்வூதியத் திட்டமாக செயல்பட்டு வருகிறது. இது 01-01-2004 அன்றோ அல்லது அதன் பின்னரோ ஒன்றிய அரசு பணியில் புதியதாக பணியமர்த்தப்படும் பாதுகாப்பு படையினரை தவிர மற்ற அனைவருக்கும் பொருந்தும். 01-05-2009 முதல் அனைத்து குடிமக்களுக்கும்

விரிவுபடுத்தப்பட்டதால் இத்திட்டம் தேசிய ஓய்வூதிய முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

(ii) தேசிய ஓய்வூதியத் திட்டமானது வரையறுக்கப்பட்ட பங்களிப்பு அடிப்படையில் அடுக்கு–I மற்றும் அடுக்கு–II என இரண்டு அடுக்குகளாக உள்ளன.

(iii) அடுக்கு–I–ன் கீழான ஓய்வூதிய கணக்கானது 01.01.2004 அன்றோ அல்லது அதன் பின்னரோ அரசு பணியில் பணியமர்த்தப்படும் அனைத்து பணியாளர்களுக்கும் கட்டாயமானதாகும். அடுக்கு–I இல் பணியாளர்களின் சம்பளப் பட்டியலில் இருந்து ஒவ்வொரு மாதமும் பங்களிப்பாக அடிப்படை ஊதியம், அகவிலை ஊதியம் மற்றும் அகவிலைப் படியில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. இந்த பங்களிப்பு தொகையானது ஏழாவது ஊதியக்குழு பரிந்துரைகளின் அடிப்படையில் 14 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அரசு அதற்கு சமமான

தொகையினை செலுத்துகின்றது. அடுக்கு–I ஆனது ஆரம்ப கட்டத்தில் திரும்ப பெற இயலாத கணக்காகவும், தற்போது பகுதி அளவாக திரும்பப் பெறும் கணக்காகவும் மாறியுள்ளது.

(iv) அடுக்கு–II கணக்கானது பொது வருங்கால வைப்பு நிதிக் கணக்கிற்கு நிகராக ஒரு தன்னார்வ சேமிப்புக் கணக்காக 01–12–2009 முதல் நடைமுறையில் இருந்து வருகிறது. செயல்பாட்டில் உள்ள அடுக்கு–I கணக்கானது அடுக்கு–II கணக்கைத் துவங்குவதற்கான முன்நிபந்தனையாகும். அடுக்கு–II–ற்கான பங்களிப்புகள் சந்தாதாரர்களின் விருப்பத்தேர்வின் அடிப்படையில் திரும்ப பெறக்கூடிய ஒரு தனி கணக்காக வைக்கப்பட்டுள்ளது.

(v) 01–01–2004 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஒன்றிய அரசுப் பணியில் சேரும் புதிய அரசு பணியாளர்களுக்கு

தற்போதுள்ள வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியம் மற்றும் பொது வருங்கால வைப்பு நிதி ஆகிய பயன்கள் பொருந்தாது.

(vi) மைய ஆவண வைப்பு நிறுவனம் மற்றும் ஓய்வூதிய நிதி மேலாளர்கள் நியமிக்கப்பட்டு, ஒவ்வொரு நபரின் கணக்கில் சேர்ந்த நிலுவைத்தொகையும் அவர்களுக்கு மாற்றப்படும் வரை, அரசு பணியாளர்களின் பங்களிப்புகள் பொதுக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. மைய ஆவண வைப்பு நிறுவனம் நிலையாக உருவாகும் வரை, மத்திய ஓய்வூதிய கணக்கியல் அலுவலகம் (CPAO) மைய ஆவண வைப்பு நிறுவனமாக செயல்பட்டது.

(vii) பணம் பெற்று வழங்கும் அலுவலர் / சம்பளக் கணக்கு அலுவலர் (கருவூல அலுவலர்) அல்லது ஆன்லைன் இயங்குதளம் / (eNPS / அல்லது Points of Presence (POP) மூலம் ஒரு தேசிய ஓய்வூதியத் திட்டக் கணக்கை சந்தாதாரர்

தொடங்கி நிரந்தர ஓய்வூதியக் கணக்கு எண்ணை (PRAN) பெறலாம்.

(viii) முதலீடு மற்றும் ஓய்வூதிய நிதியினை சந்தாதாரர்கள் அவர்களின் விருப்பத்தின் பேரில் தேர்வு செய்யலாம்;

(ix) சந்தாதாரர்கள் தங்கள் இருப்பிடம், வேலை அல்லது ஓய்வூதிய நிதி மேலாளரை மாற்றினாலும், நாட்டில் எங்கிருந்தும் தங்களின் கணக்கை எளிதாக இயக்கி கையாள வழிவகை செய்கிறது.

(x) சந்தாதாரர்கள் 60 வயது அல்லது அதற்குப் பிறகும் அடுக்கு–I–க்கான கணக்குத் திட்டத்தில் இருந்து வெளியேற முடியும். இத்திட்டத்திலிருந்து வெளியேறும் பணியாளர்கள் அவர்களது ஓய்வூதிய ஒட்டுமொத்த நிதியில் 40% ஏதாவது ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தில் (IRDA) வருடாந்திர பயன்பெறும் வகையில் முதலீடு செய்வது கட்டாயமாகும், இது பணியாளர் மற்றும் அவரைச்

சார்ந்தவர்களுக்கு வாழ்நாள் ஓய்வூதியத்தை வழங்கும். சந்தாதாரர்கள் 60 வயதை எய்துவதற்கு முன் திட்டத்தை விட்டு வெளியேறினால், வருடாந்திர ஓய்வூதிய ஒட்டுமொத்த நிதியில் ஓய்வூதிய பலன் பெறும் வகையில் காப்பீட்டு நிறுவனத்தில் 80% கட்டாயமாக முதலீடாக வைக்கப்படும்.

(xi) வெளிப்படையான முதலீட்டு விதிமுறைகள் மற்றும் தேசிய ஓய்வூதியத் திட்ட அறக்கட்டளையின் நிதி மேலாளர்களின் வழக்கமான கண்காணிப்பு மற்றும் செயல்திறனுடன் தேசிய ஓய்வூதியத் திட்டமானது ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மேம்பாட்டு ஆணையத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது.

(xii) ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (PFRDA) ஓய்வூதிய முதலீட்டு சந்தையை ஒழுங்குபடுத்தி மேம்படுத்துகிறது.

மத்திய குடிமைப் பணி (ஓய்வூதியம்) விதி, 1972–ன் கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் "பணிக்கொடை மற்றும் இறப்புப் பணிக்கொடை" ஆகியவை தேசிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கும் பொருந்தும் என 2016 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் ஒன்றிய அரசால் தேசிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஓய்வூதியமாக ரூ.9000/– நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஏழாவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 01–04–2019 முதல் பணியாளர் மற்றும் அரசின் பங்களிப்பு முறையே 14% ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## 10. பல்வேறு மாநிலங்களில் தேசிய ஓய்வூதியத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட விவரம்

ஒன்றிய அரசின் தேசிய ஓய்வூதிய திட்டமானது 01–01–2004 முதல் ஒன்றிய அரசு பணியாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு 29–03–2008 முதல் நிலுவைத் தொகைகள் ஓய்வூதிய நிதி அறக்கட்டளைக்கு (Pension Fund Trust) மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தேசிய ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைபடுத்தியுள்ள மாநிலங்களின் விவரங்கள் பின்வருமாறு:–

| **மாநிலங்களின் பெயர்** | **நடைமுறைப்படுத்தப்பட்ட நாள்** |
|---|---|
| ஆந்திர பிரதேசம் | 01–09–2004 |
| அருணச்சல பிரதேசம் | 01–01–2008 |
| அசாம் | 01–02–2005 |
| பீகார் | 01–09–2005 |

| மாநிலங்களின் பெயர் | நடைமுறைப்படுத்தப்பட்ட நாள் |
|---|---|
| சத்தீஷ்கர் | 01–11–2004 |
| கோவா | 05–08–2005 |
| குஜராத் | 01–04–2005 |
| அரியானா | 01–01–2006 |
| இமாச்சல பிரதேசம் | 15–05–2003 |
| ஜம்மு & காஷ்மீர் | 01–01–2010 |
| ஜார்கண்ட் | 01–12–2004 |
| கர்நாடகா | 01–04–2006 |
| கேரளா | 01–04–2013 |
| மத்திய பிரதேசம் | 01–01–2005 |
| மகாராஷ்ட்டிரா | 01–11–2005 |
| மணிப்பூர் | 01–01–2005 |
| மேகாலயா | 01–04–2010 |
| மிசோரம் | 01–09–2010 |
| நாகாலாந்து | 01–01–2010 |
| ஒடிசா | 01–01–2005 |
| பஞ்சாப் | 01–01–2004 |

| மாநிலங்களின் பெயர் | நடைமுறைப்படுத்தப்பட்ட நாள் |
|---|---|
| ராஜஸ்தான் | 01–01–2004 |
| சிக்கிம் | 01–04–2006 |
| தெலுங்கானா | 01–09–2014 |
| உத்திர பிரதேசம் | 01–04–2005 |
| உத்திரகாண்ட் | 01–10–2005 |
| திரிபுரா | 01–07–2018 |

மேற்கு வங்க மாநிலம் தவிர அனைத்து மாநிலங்களும் தேசிய ஓய்வூதிய திட்டத்தில் இணைந்துள்ளது. தமிழ்நாட்டில் பங்களிப்பு ஓய்வூதிய திட்டமானது 01–04–2003 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் இதுவரையில் நிலுவைத் தொகைகள் தேசிய ஓய்வூதிய அமைப்பிற்கு மாற்றம் செய்வதற்கான வழிமுறைகள் ஏதும் வகுக்கப்படவில்லை.

**11. வல்லுநர் குழு அமைத்தல்**

தற்போதுள்ள வரையறுக்கப்பட்ட பயன் தரும் ஓய்வூதியத் திட்டத்தை தொடர பல்வேறு அரசு பணியாளர்கள் / சங்கங்களின் கோரிக்கையை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, பொருத்தமான முடிவுகளை மேற்கொள்ள அரசிற்கு பரிந்துரைக்க ஏதுவாக 2016 ஆம் ஆண்டில் ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையினை 27-11-2018 அன்று அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

**12. இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் தணிக்கை அறிக்கை குறிப்புகள்**

மார்ச் 31, 2018 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான தணிக்கை அறிக்கையில் குறைவான நிதி முதலீடு மற்றும் கருவூலப்பட்டி முதலீட்டிற்கு பெறப்பட்ட குறைவான வட்டி காரணமாக 2015-2018 காலகட்டத்தில் மாநில

அரசிற்கு ரூ.797.12 கோடி கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது என கண்டறியப்பட்டுள்ளது. பங்களிப்பு ஓய்வூதிய நிதிக்கு பணியாளர் மற்றும் அரசின் பங்களிப்பு எவ்வாறு முதலீடு செய்யப்பட வேண்டும் என்ற முடிவை எடுப்பதற்கான நீண்ட தாமதம் பணியாளர்களுக்கு கணிசமான நிதி இழப்பை ஏற்படுத்துகிறது மற்றும் நிதி பாதுகாப்பின்மைக்கு உட்படுகிறது. அதே நேரத்தில், அரசாங்கம் எதிர்மறை வட்டி சுமையின் காரணமாக தற்போது ஆண்டுக்கு ரூ.1200 கோடிக்கும் அதிகமான கூடுதல் நிதிச் செலவையும் எதிர்கொள்கிறது. எனவே அனைத்துப் பரிமாணங்களின் அடிப்படையிலும் இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரின் தணிக்கைத் தடை குறிப்புகளையும் கருத்தில் கொண்டு வல்லுநர் குழுவின் பரிந்துரைகளின் மீது விரைவில் முடிவு எடுக்கப்படும்.

## வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டம்
## (பழைய ஓய்வூதியத் திட்டம்)

**வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெறும் அரசு பணியாளர்கள் பெறும் பயன்களின் விவரங்கள் பின்வருமாறு:**

**13. ஓய்வூதியம் (Pension)**

(அ) ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதி பணிக்காலம் 10 நிறைவுற்ற ஆண்டுகளாகும் (10 completed years). முழு ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதி பணிக்காலம் 30 நிறைவுற்ற ஆண்டுகளாகும். மேலும், அரசுப் பணியாளர்கள் ஓய்வு பெறும்போது பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது இறுதி 10 மாத பணிக்காலத்தில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவீதம் இதில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது.

(ஆ) 01–10–2017 முதல், குறைந்தபட்ச மாத ஓய்வூதியம் 7,850 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## 14. கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம்

ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு, கீழ்க்கண்டவாறு கூடுதல் ஓய்வூதியமாக / கூடுதல் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகின்றது.

| வ. எண். | ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் வயது வரம்பு | கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் | ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் 01–06–2021 அன்றுள்ளபடி எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 80 முதல் 84 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 20%. | 43,050 |
| 2. | 85 முதல் 89 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 30%. | 24,503 |

| வ. எண். | ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் வயது வரம்பு | கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் | ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் 01-06-2021 அன்றுள்ளபடி எண்ணிக்கை |
|---|---|---|---|
| 3. | 90 முதல் 94 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 40%. | 6,282 |
| 4. | 95 முதல் 99 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 50%. | 1,020 |
| 5. | 100 மற்றும் அதற்கு மேல் | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 100%. | 138 |
| **மொத்தம்** | | | **74,993** |

## 15. உள்ளாட்சி அமைப்பு பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கான ஓய்வூதியம்

அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி

அமைப்பு பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுவது போன்றே ஓய்வுகாலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

## 16. வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டம் மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றின் கீழ்வரும் பணியாளர்களுக்கான ஓய்வுக்காலப் பயன்கள்

ஓய்வு பெறும்போது பணியாளர் கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு, சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பு ஒப்படைப்பு செய்து விடுப்புச் சம்பளம் பெற அனுமதியும் மற்றும் ஓய்வு பெறும் பணியாளர், ஓய்வு பெற்ற பின்னர் தன்னுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் வசிக்க விரும்பும் வேறு ஏதாவது ஊருக்குச் செல்வதற்கான பயணப்படி வழங்கப்படுகிறது.

## 17. வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ்வரும் பணியாளர்களுக்கான பணிக்கொடை (Gratuity)

### (அ) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை (Service Gratuity)

பத்து நிறைவுற்ற ஆண்டுகளுக்கு (10 completed years) குறைவாக தகுதிப் பணி புரிந்தவர்களுக்கு, அவர்கள் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. இது ஆற்றிய பணிக்காக அனுமதிக்கத்தக்க ஓய்வுகாலப் பணிக்கொடையுடன் கூடுதலாக வழங்கப்படுகின்ற மொத்த தொகையாகும்.

### (ஆ) இறப்புப் பணிக்கொடை (Death Gratuity)

அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போதே மரணமடையும் நேர்வில், 01–10–2017 முதல், பின்வரும் வீதங்களில் இறப்புப் பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:–

| வ. எண். | பணிக்காலம் | பணிக்கொடையின் வீதம் |
|---|---|---|
| 1. | ஓராண்டுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் இரு மடங்கு |
| 2. | ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் ஆறு மடங்கு |
| 3. | ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் பதினொரு ஆண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் பன்னிரண்டு மடங்கு |
| 4. | பதினொரு ஆண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் பதினைந்து மடங்கு |
| 5. | இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக | அதிகபட்சமாக மாத ஊதியத்தில் 33 மடங்கு என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரைமாதச் சம்பளம். அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக் கொடை ரூபாய் 20 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும். |

**(இ) ஓய்வுகாலப் பணிக்கொடை (Retirement Gratuity)**

ஒரு அரசு பணியாளர், ஐந்து நிறைவுற்ற ஆண்டுகளும் (5 completed years) அதற்கு மேலும் தகுதிப் பணியை முடித்திருந்தால், அவர் ஓய்வு பெறும்போது ஓய்வுகாலப் பணிக்கொடை வழங்கப்படுகிறது. 01-04-1998 அன்று அல்லது அதற்குப்பிறகு ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப் படியின் அடிப்படையில் பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. 01-01-2016 முதல் இறப்பு பணிக்கொடை / ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்புத் தொகை 20 இலட்சம் ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## 18. வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ்வரும் பணியாளர்களுக்கான குடும்ப ஓய்வூதியம் (Family Pension under Defined Benefit Pension Scheme)

(அ) 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி அல்லது அதற்குப் பிறகு இறந்த அரசு பணியாளர் அல்லது ஓய்வுபெற்ற அரசு பணியாளரின் குடும்பத்திற்கு அவர் ஒரு வருடத்திற்கும் குறையாத காலத்திற்கு தொடர்ச்சியான தகுதிப் பணியினை நிறைவு செய்திருந்தால் அவர்தம் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும்.

(ஆ) அரசாணை நிலை எண்.313, நிதி(ஊதியக்குழு)த் துறை, நாள்.25.10.2017–ன் மூலமாக குடும்ப ஓய்வூதியம் நிர்ணயம் செய்யப்படும் பொழுது ஓய்வூதியதாரர் ஓய்வு பெறும் பொழுது பெற்ற ஊதியம் மற்றும் தர ஊதியத்தின் திருத்தப்பட்ட ஊதிய விகிதம் / ஊதிய ஏற்ற முறையில் தொடர்புடைய பரிந்துரைக்கப்பட்ட அலகில் குறைந்தபட்ச ஊதியத்தின் 30%–க்கும் குறைவாக இருக்கக்கூடாது.

(இ) 01–10–2017 முதல் வழங்கப்படும் குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் மாதம் 7,850 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## 19. கருணைத் தொகை (Ex–Gratia Payment)

பங்களிப்பு வருங்கால வைப்பு நிதி / மாநில அரசின் ஓய்வூதியமில்லாத பணியாளர் அமைப்பைச் சேர்ந்த இறந்த பணியாளர் குடும்பங்களுக்கும், 01–01–1986–க்கு முன் பணியிலிருந்து ஓய்வுபெற்ற அல்லது பணியிலிருக்கும் போது இறந்துவிட்ட முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியில்லாத நபர்களுக்கும் மாதமொன்றுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை 645 ரூபாயுடன் 01–07–2019 முதல் 304 சதவீத அகவிலைப்படியுடன் வழங்கப்படுகிறது.

## 20. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்தல் (Commutation of Pension)

(அ) ஓய்வூதியம் பெறுவோர், தமது ஓய்வூதியத் தொகையில் $33^{1}/_{3}$ விழுக்காடு வரையிலான ஓய்வூதியத் தொகையினை ஒட்டு மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்த பிறகு, ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதிக்கும் அகவிலைப்படி வழங்கப்படுகிறது.

## 21. அகவிலைப்படி

ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு, அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போலவே அகவிலைப்படி வழங்கப்படுகிறது. தற்காலிக ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் அகவிலைப்படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

## 22. மருத்துவப்படி

01-10-2017 முதல் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு மாதமொன்றுக்கு 300 ரூபாய் மருத்துவப் படி வழங்கப்படுகிறது. தற்காலிக ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் மருத்துவப்படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

## 23. பொங்கல் பரிசு

"C" மற்றும் "D" பிரிவு பணியாளர்களாக இருந்து ஓய்வுபெற்ற மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) உட்பட அனைத்து "C" மற்றும் "D" பிரிவு அரசு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் (Ad-hoc pensioners of all categories) மற்றும் அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்கள் அதாவது ஓய்வூதியதாரர்கள்

எந்த பணியாளர் பிரிவில் ஓய்வு பெற்றிருந்தாலும் / பணியாளர்கள் பணியிடை மரணம் அடைந்திருந்தாலும் ஒட்டுமொத்த பொங்கல் பரிசுத் தொகையாக 500 ரூபாய் வழங்கப்படுகிறது.

**24. பண்டிகை முன்பணம்**

ஓய்வூதியதாரர்களுக்கு பண்டிகை முன்பணம் 02-08-2019 முதல் 4,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

**25. ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்**

**(அ)** 01-01-1997 முதல் ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு மாதத்திற்கான சந்தாத் தொகை செலுத்திய பிறகு இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் தகுதியான குடும்ப உறுப்பினர்களுக்கு அல்லது ஓய்வூதியதாரரால் நியமனம் செய்யப்பட்ட நியமனதாரருக்கு 50,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

(ஆ)குடும்பப் பாதுகாப்பு நிதியின் கீழ் பெறப்பட்ட சந்தா தொகையானது தீர்வுக்காக நிலுவையில் உள்ள ஏராளமான கோரிக்கைகள் மற்றும் ஓய்வூதியதாரர்களிடமிருந்து பெறப்பட்ட நிலுவையில் உள்ள உரிமை கோரல்களுக்கு வழங்க போதுமானதாக இல்லை. ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ் உள்ள நிலுவைத் தொகைகளை தீர்வு செய்ய ஏதுவாக ஐந்து வருடங்களுக்குள் வட்டி இல்லாமலேயே அரசுக்கு திரும்ப செலுத்தும் பொருட்டு அரசு 25.00 கோடி ரூபாய் முன்பணமாக வழங்கியுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியர்கள் செலுத்தும் சந்தா தொகையினை ரூ. 80/–லிருந்து ரூ.150/–ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் 31–07–2021 வரையிலான காலங்களுக்கு 2,26,349 ஓய்வூதியதாரர்களின் குடும்பங்களுக்கு 834.25 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

## 26. தமிழ் நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம்

(அ) இத்திட்டம் 01-04-1984 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதம் 20 ரூபாய் வீதம் 148 மாதங்கள் வரை அரசு பணியாளரிடம் பிடித்தம் செய்யப்பட்டு, அவர் பணியிலிருந்து ஓய்வுபெறும் போது, அவர் செலுத்திய பங்களிப்புத் தொகை, வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையாக 10,000 ரூபாய் சேர்த்து வழங்கப்படுகிறது.

(ஆ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000 என்ற புதிய திட்டம் 01-10-2000 முதல் தொடங்கப்பட்ட பின்னர் முந்தைய திட்டத்தில் பணியாளர்கள் சேர்க்கை நிறுத்தப்பட்டது. எனினும் முந்தைய திட்டத்தில் சேர்க்கப்பட்ட பணியாளர்கள் ஓய்வுபெறும் போது உரிய பணப்பயன் அத்திட்டத்தில் தொடர்ந்து

வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 30-09-2000 வரை அரசுப் பணியில் உள்ள அனைத்து நிரந்தரப் பணியாளர்களுக்கும் விருப்பத்தின் பேரில் இப்புதிய திட்டத்தில் சேர்க்கப்பட்டு 50 ரூபாய் வீதம் மாதந்தோறும், ஓய்வு பெறும் மாதத்திற்கு முந்தைய மாதம் வரை செலுத்தி அத்தொகை ஓய்வு பெறும்போது வட்டியுடன் திரும்ப வழங்கப்படுகிறது.

(இ) 01-10-2000 அன்றும், அதற்குப் பிறகும் பணியில் சேரும் பணியாளர்கள் அனைவருக்கும் இத்திட்டம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு மாதச் சந்தா தொகை 70 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவர் பணியிலிருந்து ஓய்வுபெறும் போது, அவர் செலுத்திய பங்களிப்புத் தொகை, வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையாக 10,000 ரூபாய் சேர்த்து வழங்கப்படுகிறது.

**27. கடந்த ஆண்டுகளில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பயன்களுக்கான செலவு விவரம் பின்வருமாறு:–**

| ஆண்டு | ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பலன்கள் குறித்த மொத்தச் செலவு (ரூபாய் கோடியில்) | மொத்த வருவாய் கணக்கு வரவுகளில் சதவீதம் |
|---|---|---|
| 2005–2006 | 4,488.83 | 13.22 |
| 2006–2007 | 5,461.68 | 13.35 |
| 2007–2008 | 6,038.96 | 12.71 |
| 2008–2009 | 7,776.21 | 14.13 |
| 2009–2010 | 8,439.24 | 15.11 |
| 2010–2011 | 11,855.27 | 16.89 |
| 2011–2012 | 12,687.97 | 14.89 |
| 2012–2013 | 13,248.08 | 13.41 |
| 2013–2014 | 14,934.37 | 13.82 |
| 2014–2015 | 17,528.06 | 14.32 |
| 2015–2016 | 18,490.89 | 14.33 |
| 2016–2017 | 20,176.74 | 14.39 |

| ஆண்டு | ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பலன்கள் குறித்த மொத்தச் செலவு (ரூபாய் கோடியில்) | மொத்த வருவாய் கணக்கு வரவுகளில் சதவீதம் |
|---|---|---|
| 2017-2018 | 22,432.23 | 15.34 |
| 2018-2019 | 29,710.58 | 17.10 |
| 2019-2020 | 30,219.77 | 17.32 |
| **2020-2021 (RE)** | 27,696.39 | 15.33 |
| **2021-2022 (IBE)** | 35,250.89 | 16.09 |
| **2021-2022 (RBE)** | 28,250.59 | 13.95 |

## 28. மின்னணு ஓய்வூதியம் (e-Pension)

ஓய்வூதியம் வழங்கும் நடைமுறையும் மற்றும் ஓய்வூதியதாரர்கள் தொடர்பான புள்ளிவிவரங்களையும் பெற கணினித் தகவல் மென்பொருள் அனைத்து மாவட்டங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை

ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களை நேரடியாக அவரவர் வங்கிக் கணக்குகளில் மின்னணு தீர்வு முறை (Electronic Clearing Service) / மண்டல மின்னணு தீர்வு முறை (Regional Electronic Clearing Service) வழியாக வரவு வைக்கப்படுகிறது. மேலும், முதன்மை மாநில கணக்காயரின் தொகுப்பிலுள்ள ஓய்வூதியம் குறித்த விவரங்கள் அனைத்தும் மின்னணு ஓய்வூதிய மையத் தொகுப்பிற்கு (e–Pension Central Server) மாற்றப்பட வழிவகை செய்வதன் மூலம் ஓய்வூதியம் குறித்த விவரங்களைத் துல்லியமாக பெறுவதோடு குறைந்த செலவு மற்றும் குறுகிய காலத்தில் அதிக பயன் பெற வழி ஏற்படும்.

**29. ஓய்வூதியதாரர்களின் நேர்காணல் (Mustering)**

ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ஏற்படும் இடர்களை

கருத்தில் கொண்டு, ஓய்வூதியதாரர் நேர்காணலை எளிமைப்படுத்தும் முயற்சியாக தேசிய தகவல் மையத்துடன் (NIC) இணைந்து ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களை அடையாளம் காண மின்னணு விரல் ரேகை பதிவு செய்தல் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஓய்வூதியதாரர்களின் வருடாந்திர நேர்காணலின் போது ஆதார் எண்கள் ஓய்வூதியதாரர்களின் விவரங்களுடன் இணைக்கப்பட்டு வருகிறது. கொரானா (COVID–19) நோய் தொற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்டு, ஓய்வூதியம்/ குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் பயன்பெறும் வகையில் ஓய்வூதியர்களின் 2021–ம் ஆண்டிற்கான வருடாந்திர நேர்காணல் (Annual Mustering) மற்றும் வாழ்வு சான்று சமர்ப்பித்தல் (furnishing of Life Certificate) ஆகியவற்றிற்கு விலக்கு அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

## 30. ஓய்வூதிய பதிவுகள் மின்னணுமயமாக்கல் (Digitization)

ஓய்வூதியம் பெறும் ஆணைகளையும், பிற பதிவுகளையும் கணினிமயமாக்க ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை மற்றும் அனைத்து கருவூலங்களில் மின்னணுமயமாக்கல் செய்யப்பட்டு இந்தப் பதிவுகளை மின்னணு ஓய்வூதிய மென் பொருளில் இணைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. சென்னை மாநில கணக்காயர் அலுவலகத்தில் உள்ள ஓய்வூதியம் தொடர்பான ஆவணங்களை மின்னணுமயமாக்கம் செய்திட அரசு 95.53 இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்துள்ளது. மேலும், இரண்டாம் கட்டத்தின் கீழ் இப்பணிகளுக்கான செலவுகளை மேற்கொள்ள அரசு 124 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிர்வாக ஒப்புதலை வழங்கியுள்ளது. இப்பணிக்காக தற்போது வரை 43.44 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

## 31. ஓய்வூதியர் இணையம் (Pensioners Portal)

தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களுக்காக பிரத்யேகமாக ஒரு ஓய்வூதியர் இணையம் உருவாக்க அரசாணை (நிலை) எண்.359, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள். 07-12-2017-ல் ஆணை வெளியிடப்பட்டது. இதற்கான வலைதளம் மற்றும் மென்பொருள் உருவாக்கப்பட்டு, 18-01-2019-ல் துவக்கப்பட்டது. இவ்வலைதளத்தில் ஓய்வூதியதாரர்கள், தங்களது ஓய்வூதியம் பெற்ற விவரம், ஓய்வூதியம் தொகுத்துப் பெற்றதை மீளப்பெறுவது, கூடுதல் ஓய்வூதியம், ஓய்வூதியதாரர்களின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பான விவரங்கள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வலைதளத்தின் மூலம் ஓய்வூதியதாரர்கள் தாங்களாகவே தங்களுக்குத் தேவையான விவரங்களை பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

## 32. ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத் துணை உட்பட) குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2018

(அ) ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத் துணை உட்பட)/ குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2014, 01-07-2014 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 01-07-2018 முதல் 30-06-2022 முடிய, நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவிற்கு சில சிறப்பு அம்சங்களுடன் நீட்டிக்கப்பட்டுள்ளது. பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இப்புதிய திட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றை பெற உச்சவரம்பு 2 இலட்சம் ரூபாயிலிருந்து 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) இப்புதிய திட்டத்தில், சில மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றைப் பெற உச்சவரம்பு 7.50 இலட்சம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

(இ) மேலும், கண்புரை அறுவை சிகிச்சைக்கான மருத்துவ உதவியின் உச்சவரம்பு கண் ஒன்றிற்கு 20,000 ரூபாய் வீதமும், கர்ப்பப்பை நீக்குவதற்கான அறுவை சிகிச்சை உதவியின் உச்சவரம்பு 45,000 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஈ) இப்புதிய திட்டத்தில், திடீரென்று எதிர்பாராத விதமாக, உடனடி கவனிப்பு தேவைப்படுகின்ற மற்றும் விபத்தை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு இத்திட்டத்தின்

கீழ் அங்கீகரிக்கப்படாத (Non–Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 114 வகையான சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை நடைமுறைகள் கட்டணமின்றி மேற்கொள்வதற்குத் தமிழ்நாடு, புதுச்சேரி, திருவனந்தபுரம், புதுதில்லி மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களில் உள்ள 1168 அங்கீகரிக்கப்பட்ட (Network) மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 01–07–2018 முதல் 30–06–2022 வரையிலான நான்காண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் காப்பீட்டு கட்டணமாக ஒரு ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரருக்கு 3,800 ரூபாய் வீதம் யுனைடெட் இந்தியா காப்பீட்டு

நிறுவனத்திற்கு சேவை வரிகளுடன் அரசு செலுத்தும். இதற்கென ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து ஒவ்வொரு மாதமும் 350 ரூபாய் வீதம் அவர்களது மாதாந்திர ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்திலிருந்து ஜூலை மாதம் 2018 முதல் பிடித்தம் செய்யப்படுகிறது. பிடித்தம் செய்யப்பட்ட தொகையை விடக் கூடுதலாகச் செலுத்தப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் வரி உட்பட காப்பீட்டுக் கட்டணத்தை அரசு / அரசு சார்ந்த அமைப்புகள் ஏற்கும்.

(உ) 01-07-2014 முதல் 30-06-2018 வரையிலான நான்காண்டுகளில் 2,01,285 பயனாளிகள் 578.01 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர்.

(ஊ) இத்திட்டம் நீட்டிக்கப்பட்ட 01-07-2018 முதல் 31-08-2021 வரை 1,85,266

பயனாளிகள் 720.24 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

(எ) மேலும், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் அரசு பல்கலைக்கழகங்கள், விருப்பமுள்ள மாநில அரசு அமைப்புகள் / நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரிந்து அந்தந்த நிறுவனங்களிடமிருந்து ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அந்தந்த நிறுவனங்களால், கூடுதலாகச் செலுத்தப்படும் தொகையினை மாநில அரசின் வரவு–செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்காமல் அந்தந்த நிறுவனங்களால் செலுத்தப்படும் நிலையில், அப்படியே இத்திட்டத்தினை நீட்டித்துக்கொள்ள அரசினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(ஏ) மேலும், தற்போது கோவிட்–19–க்கான மருத்துவ சிகிச்சையினை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகளில் மேற்கொள்ள 2.50 கோடி ரூபாய் நிதிய மூலதனம் **(Corpus Fund)** உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இதுநாள் வரை 17.50 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**33. ஓய்வூதிய இயக்குநரகம்**

அரசு 01–09–1994 முதல் ஓய்வூதிய இயக்ககத்தை உருவாக்கியது. இவ்வியக்ககம் தற்போது நிதித் துறை கூடுதல் செயலாளர் நிலையில் உள்ள அலுவலரை இயக்குநராகக் கொண்டுள்ளது. இந்த இயக்ககம், கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது.

(அ) மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஓய்வூதிய குறைகளைத் தீர்த்தல்.

(ஆ) ஓய்வூதியதாரர்களின் குறைகளை, ஓய்வூதிய அதாலத் அமைப்பு மூலம் தீர்த்தல்.

(இ) ஓய்வூதியதாரர்கள் கோரும் தெளிவுரைகளை வழங்கிடல்.

(ஈ) அரசுத் துறைகளின் தொழிற்சாலை பணியாளர்களின் சேமநல நிதித் திட்டம் தொடர்பான பணிகளை நிர்வகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்.

(உ) தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நலநிதித் திட்டம், 1995–ன் கீழ் நிலுவையிலுள்ள நேர்வுகளை தீர்வு செய்தல்.

(ஊ) குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம், 1997–ஐ நிர்வகித்தல் மற்றும் அதை செயல்முறைபடுத்துதல்.

(எ) தமிழ்நாடு அரசு பணியாளர்களின் சிறப்பு சேமநலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984 மற்றும் 2000–ன் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு பணி.

(ஏ) ஓய்வூதிய இயக்ககத்தில் பணிபுரிவோரின் ஊதியம் மற்றும் இதர பயன்களின் வரவு செலவுத் திட்டம் மதிப்பீடு செய்தல் மற்றும் துறைக் கணக்குகளை சம்பளக் கணக்கு அலுவலகம் மற்றும் மாநிலக் கணக்காயர் கணக்குகளுடன் ஒத்திசைவு பணி செய்தல்.

(ஐ) அமைப்புசாரா தினக்கூலிப் பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொது மக்களுக்கான தமிழ்நாடு அரசு சமூக பாதுகாப்புத் திட்டம், 1974 ஐ நிர்வகித்து நிறைவேற்றுதல்.

## 34. ஓய்வூதிய இயக்ககத்தின் மூலம் ஓய்வூதியதாரர்களின் குறை தீர்த்தல்

பல்வேறு மாவட்டங்களிலுள்ள ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் ஆகியோர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலமாக பெறப்படும் மனுக்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலமாக பெறப்படும் மனுக்கள் ஆகியவற்றின் மீது உரிய கவனம் செலுத்தப்பட்டு, ஓய்வூதியதாரர்களின் குறைகளுக்கு உடனடியாக தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன.

## 35. மாவட்ட ஆட்சியாளர்களின் ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

மாவட்ட ஆட்சியாளர்கள் ஓய்வூதியதாரர்களின் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தினை நான்கு மாதங்களுக்கு ஒரு முறை தங்களது மாவட்டங்களில் நடத்துகின்றனர். இக்கூட்டத்தில், இயக்குநர் அல்லது இணை

இயக்குநர் பங்கேற்று, அம்மாவட்டத்திலுள்ள ஓய்வூதியதாரர்களின் குறைகள் கேட்டறியப்பட்டு, அவற்றை விரைந்து களைந்திட மாவட்ட ஆட்சியருக்கு உதவி புரிகின்றனர். ஓய்வூதிய பலன்கள் தொடர்பான கோப்புகள் மாநில கணக்காயர் அலுவலகத்தில் நிலுவையிலிருந்தால் அவற்றை விரைந்து முடித்திட, இவ்வியக்ககத்தால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்ட வாரியான குறை தீர்க்கும் மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மாவட்டங்களில் ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் கூட்டங்கள் முறையாக நடத்தப்பட்டு, துறைவாரியாக ஓய்வூதியதாரர்களின் குறைகள் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 36. ஓய்வூதிய அதாலத்

ஓய்வூதியதாரர்களின் குறை தீர்ப்பதற்கென்று லோக் அதாலத்தில் ஓய்வூதிய இயக்குநர், சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத்

துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாநிலக் கணக்காயரின் பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குழுவினை அரசு அமைத்துள்ளது. ஒவ்வொரு மாதமும் இந்த அதாலத் நடைபெறுகிறது. இதுவரை 456 ஓய்வூதியதாரர்களின் மனுக்கள் விசாரிக்கப்பட்டு **258** மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளன.

## 37. ஓய்வூதியர்களின் கையேடு

ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்கள், அவ்வப்பொழுது அரசால் வெளியிடப்படும் ஆணைகள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் கருத்துரு அனுப்ப வழிகாட்டுதல் ஆகியவற்றை ஓய்வூதியதாரர்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு கையேடு ஒன்று தயார் செய்யப்பட்டு இணைய தளத்தில் (www.tn.gov.in/dop) வெளியிடப்பட்டுள்ளது. மின் அஞ்சல் மூலமாகவும் ஓய்வூதிய

இயக்குநரகத்தை தொடர்பு கொள்ளலாம். இத்துறைக்கான மின் அஞ்சல் முகவரி dop@tn.nic.in.

## 38. ஓய்வூதிய இயக்குநரக கணினிமயமாக்கம்

குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் தேவையான அடிப்படை விவரங்கள் அளிக்கப்பட்டு, ஒப்பளிப்பு ஆணைகள் வெளியிடப்படுகின்றன. அதைப்போன்று, தொழிலாளர் சேமநல நிதித் திட்டம் 1969 –ன் மூலம் வழங்கப்பட வேண்டிய இறுதித் தொகை, கணினி மூலம் பணம் பட்டுவாடா (NEFT) பயனாளிகளின் வங்கி கணக்குகளில் வரவு செய்யப்பட்டு வருகிறது.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**

நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்
துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.